## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

## (17.04.2024 முதல் 21.04.2024)

**அறிக்கைஎண்: 05/2024** **தேதி : 16.04.2024**

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.04.2024 முதல் 21.04.2024).

| கடந்த வார வானிலை (12.04.2024 முதல் 15.04.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (17.04.2024 முதல் 21.04.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/04 | நாள்-2 13/04 | நாள்-3 14/04 | நாள்-4 15/04 | தேதி | நாள்-1 17/04 | நாள்-2 18/04 | நாள்-3 19/04 | நாள்-4 20/04 | நாள்-5 21/04 |
| 1.4 | 8.9 | 1.6 | 0.0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 37 | 35 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 38 | 38 | 37 |
| 28 | 28 | 28 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 28 | 27 | 27 |
| 6 | 6 | 6 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 6 | 6 | 7 |
| 64-73 | 66-59 | 67-60 | 78-59 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-40 | 80-40 | 80-40 | 80-40 | 80-50 |
| 4 | 4 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 18 | 20 | 18 | 18 |
| தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 17.04.2024 முதல் 21.04.2024 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14 – 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | ஏதிர்பார்க்கப்படும் வானிலையை கருத்தில் கொண்டு கோடை உழவு செய்யவும் |
| பயறுவகை | அறுவடை | முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும். |

| | | |
|---|---|---|
| பயிர்கள் | | அறுவடை செய்த பயிரை வெயிலில் காய வைத்து பின்பு பயறைப் பிரித்தெடுத்து சுத்தம் செய்து சேமிக்கவும். |
| தென்னை | | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிற்ப்பதற்க்கு ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும். |

**குறுஞ்செய்தி**

ஏதிர்பார்க்கப்படும் வானிலையை கருத்தில் கொண்டு கோடை உழவு செய்யவும்

.

**இயக்குநர்**